**செய்தி வெளியீடு எண்: 427** **நாள்: 30.08.2016**

# வாக்காளர் பட்டியல் சிறப்பு சுருக்கமுறைத் திருத்தம், 2017

## கால அட்டவணை

| | |
|---|---|
| வரைவு வாக்காளர் பட்டியல் வெளியிடப்படும் நாள் | 01–09–2016 |
| பெயர் சேர்க்க/ நீக்க/ திருத்த மனுக்கள் அளிக்க கால அவகாசம் | 01–09–2016 முதல்<br>30–09–2016 வரை |
| மனுக்கள் பெற சிறப்பு முகாம் நாட்கள் | 11–09–2016<br>(ஞாயிற்றுக்கிழமை) மற்றும்<br>25–09–2016<br>(ஞாயிற்றுக்கிழமை) |

**வாக்காளர் பட்டியல்களை படித்தல்**

வெளியிடப்பட்ட வரைவு வாக்காளர் பட்டியலை தலைமைத் தேர்தல் அதிகாரியின் வலைதளமான www.elections.tn.gov.in-இல் காணலாம். **10–09–2016** மற்றும் **24–09–2016** ஆகிய நாட்களில் கிராம சபை / உள்ளாட்சி மன்றம் மற்றும் குடியிருப்போர் நலச் சங்கக் கூட்டங்களிலும், வாக்காளர் பட்டியலின் தொடர்புடைய பாகம் / பிரிவு ஆகியன படிக்கப்பட்டு பெயர்கள் சரிபார்க்கப்படும். அனைத்து வாக்காளர்களும் தங்கள் பெயர் வாக்காளர் பட்டியலில் உள்ளதா எனச் சரிபார்த்துக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்ளப்படுகின்றனர்.

**தகுதி:**

இந்தியக் குடியினராய் இருத்தல் வேண்டும். **01.01.2017 அன்று 18 வயது நிரம்பியவராகவும்** (அதாவது 31.12.1999 அன்றோ அதற்கு முன்போ பிறந்தவராய் இருத்தல் வேண்டும்), பதிவு செய்யக் கோரும் பகுதியில் **சாதாரணமாக வசிப்பவராகவும்** இருத்தல் வேண்டும்.

**குறிப்பு:**

**வாக்காளர் புகைப்பட அடையாள அட்டை வைத்திருப்பதால் மட்டுமே தேர்தலில் வாக்களிக்க இயலாது. நீங்கள் குடியிருக்கும் பகுதியின் வாக்காளர் பட்டியலில் உங்கள் பெயர் பதிவு பெற்றிருக்க வேண்டும்.**

**வாக்காளர் பட்டியல்கள் பார்வைக்கு வைக்கப்பட்டுள்ள இடங்கள்:**

- புகைப்பட வாக்காளர் பட்டியல்கள் வாக்காளர் பதிவு அதிகாரி/உதவி வாக்காளர் பதிவு அதிகாரிகளின் அலுவலகங்களில் பார்வைக்கு வைக்கப்படும். அதாவது வருவாய்க் கோட்டாட்சியர், நகராட்சி ஆணையர், வட்டாட்சியர் ஆகியோரது அலுவலகங்களிலும், மற்றும் வாக்குச்சாவடி அமைவிடங்களிலும் அவை பார்வைக்கு வைக்கப்படும். சென்னை நகரில் சென்னை மாநகராட்சி மண்டல அலுவலகங்களிலும் அவை பார்வைக்கு வைக்கப்படும்.
- நகரப் பகுதிகளில் குடியிருப்போர் நலச் சங்கங்களுக்கும், ஊரகப் பகுதிகளில் கிராம சபைகளுக்கும் வாக்காளர் பட்டியலின் உரிய பாகத்தின் நகல் அளிக்கப்படும்.
- **electoralservicessearch.azurewebsites.net** என்ற இணையதள முகவரியிலும் பெயர்களைத் தேடிக் கண்டுபிடிக்க வசதி செய்யப்பட்டுள்ளது.

**படிவங்கள்:**

| | |
|---|---|
| • முதன்முறையாகப் பெயர் சேர்க்கப்பட (அதாவது உங்கள் பெயர் வேறெங்கும் பதிவு பெறாமலிருந்தால்) அல்லது ஒரு சட்டமன்றத் தொகுதியிலிருந்து மற்றொரு சட்டமன்றத் தொகுதிக்கு வசிப்பிடம் மாறியிருந்தால் | **படிவம் 6** |
| • வெளிநாட்டில் வசிக்கும் இந்தியக் குடிமக்கள் பெயர் சேர்க்கப்பட | **படிவம் 6A** |
| • ஒரு சட்டமன்றத் தொகுதிக்குள்ளேயே வசிப்பிடம் மாறியிருந்தால் | **படிவம் 8A** |
| • பெயரை நீக்க | **படிவம் 7** |
| • பெயர், வயது, பாலினம், உறவு முறை முதலிய பதிவுகளில் திருத்தம் அல்லது சரியான உருவப்படம் இடம் பெறச் செய்ய | **படிவம் 8** |

படிவங்கள் **6** / 8A / **8** ஆகியவற்றின் வலது மேல்பக்க மூலையில் மனுதாரரின் பாஸ்போர்ட் அளவு வண்ணப் புகைப்படம் ஒட்டப்பட ஏதுவாக ஒரு கட்டம் அச்சிடப்பட்டுள்ளது. வாக்காளரின் படம் வாக்காளர் பட்டியலில் சேர்க்கப்படவும், வாக்காளர் புகைப்பட அடையாள அட்டை தயாரிக்கவும் மனுதாரர் அளிக்கும் புகைப்படம் பயன்படுத்தப்படும்.

படிவங்களை நிர்ணயிக்கப்பட்ட அமைவிடங்களிலிருந்து பெறலாம். **elections.tn.gov.in** என்ற இணைய தளத்திலிருந்தும் இலவசமாக படிவங்களை பதிவிறக்கம் செய்து கொள்ளலாம். பூர்த்தி செய்த படிவங்களை நிர்ணயிக்கப்பட்ட அமைவிடங்களில் சமர்ப்பிக்கலாம்.

**விண்ணப்பங்களை அளித்தல்**

உரிய படிவத்தில் நிரப்பப்பட்ட விண்ணப்பங்களை நிர்ணயிக்கப்பட்ட அமைவிடம் (பொதுவாக உங்கள் பகுதியில் அமைந்துள்ள வாக்குச் சாவடி), வாக்குச்சாவடி நிலை அலுவலர், உதவி வாக்காளர் பதிவு அதிகாரி அல்லது வாக்காளர் பதிவு அதிகாரி ஆகியோரிடம் அளிக்கலாம். **www.elections.tn.gov.in என்ற இணையதள முகவரியிலும் ஆன்லைன் முறையில் விண்ணப்பிக்க வசதி செய்யப்பட்டுள்ளது.**

**குறிப்பு:**

(1) முதன்முறையாக விண்ணப்பிப்போரைத் (அதாவது 18–24 வயதிலுள்ள மனுதாரர்கள்) தவிர, ஏனைய மனுதாரர்கள் அனைவரும் அவர்களுடைய **முந்தைய முகவரியையும், வாக்காளர் புகைப்பட அடையாள அட்டை எண்ணையும்** படிவத்தில் குறிப்பிடவேண்டும். இருப்பிட மாற்றம் செய்யாமலிருந்தாலுங்கூட, தற்போதைய முகவரியில் எத்தனை ஆண்டுகளாக தொடர்ந்து வசித்து வருவதையும், முன்னர் பெயர் சேர்க்கப்பட விண்ணப்பிக்க இயலவில்லை எனவும் (அல்லது) தற்போதைய வரைவு வாக்காளர் பட்டியலில் பெயர் விடுபட்டுள்ளது எனவும் குறிப்பிட வேண்டும்.

(2) முதன்முறையாக பெயர் சேர்க்கப்பட விண்ணப்பிப்போரைத் தவிர, மற்றவர்கள் அனைவரும் வாக்காளர் புகைப்பட அட்டை வைத்திருப்பதாகவே கருதப்படும். **ஒரு நபருக்கு ஒரு முறை வழங்கப்பட்ட வாக்காளர் புகைப்பட அடையாள அட்டை, அந்நபர் ஒரு பகுதியிலிருந்து வேறொரு பகுதிக்கு வசிப்பிட மாற்றம் செய்தாலுங்கூட, நாடு முழுவதிலும் செல்லுபடியாகத் தக்கதாகும்.** உங்கள் பெயர் வாக்காளர் பட்டியலில் இடம் பெற்றிருந்து, ஆனால் உங்களுடைய வாக்காளர் புகைப்பட அடையாள அட்டை தொலைந்திருந்தால், வட்டாட்சியர்/மண்டல அலுவலகத்தில் படிவம் 001-ல் புதிய அட்டை வழங்கக்கோரி எப்போதும் விண்ணப்பிக்கலாம்.

**(3) வாக்காளர் பட்டியலில் ஓரிடத்திற்கு மேல் தமது பெயரைப் பதிவு செய்ய முயல்கிற அல்லது தவறான தகவல்களைத் தருகிற எந்த ஒரு நபரும், 1950–ஆம் ஆண்டு மக்கள் பிரதிநிதித்துவச் சட்டத்தின் பிரிவு 31–ன் விதித்துறைகளின்கீழ் குற்ற நடவடிக்கைக்கு உள்ளாகத் தக்கவராவார்.**

(4) வயதுச் சான்றாக பிறப்புச் சான்றிதழ் அல்லது பள்ளிச் சான்றிதழ் அல்லது பாஸ்போர்ட்டின் நகல் அளிக்கப்படலாம். வசிப்பிடச் சான்றாக, பின்வருவனவற்றுள் ஒன்றின் நகலை அளிக்கலாம்.

அ. வங்கி/கிசான்/அஞ்சல் அலுவலக நடப்புக் கணக்குக் கையேடு; அல்லது
ஆ. விண்ணப்பதாரரின் உணவுப்பொருள் பங்கீட்டு அட்டை/கடவுச்சீட்டு/ஓட்டுநர் உரிமம்/ வருமான வரி விதிப்பு ஆணை; அல்லது
இ. விண்ணப்பதாரரின் பெயரிலோ அல்லது அவரது பெற்றோர் போன்ற நெருங்கிய உறவினர் பெயரிலோ உள்ள குடிநீர்/தொலைபேசி/மின்சாரம்/ சமையல் எரிவாயு இணைப்பு போன்றவற்றின் சமீபத்திய ரசீது; அல்லது
ஈ. கொடுத்துள்ள முகவரியில் விண்ணப்பதாரரின் பெயருக்கு வந்து சேர்ந்த தபால் துறையின் தபால்கள்
உ. வாடகை ஒப்பந்தம்
ஊ. இந்திய தனித்துவ அடையாள அதிகார அமைப்பினால் வழங்கப்பட்ட 'ஆதார்' கடிதம்

**(5) வெளிநாடுவாழ் வாக்காளர்கள் –** வெளிநாட்டில் வாழும் இந்தியக் குடிமக்களின் பெயர்கள் வாக்காளர் பட்டியலில் சேர்க்கப்பட, சம்பந்தப்பட்ட வாக்காளர் பதிவு அதிகாரியிடம் படிவம் 6A நேரில் அளிக்கப்படவேண்டும் – அல்லது வாக்காளர் பதிவு அதிகாரிக்கு தபாலிலும் படிவத்தை அனுப்பலாம். வாக்காளர் பதிவு அதிகாரியிடம் படிவம் 6A நேரில் அளிக்கப்படும்போது அதனுடன் விண்ணப்பதாரரின் புகைப்படம், ஏனைய பிற விவரங்களுடன் விசாவின் செல்திறன் பற்றிய மேற்குறிப்பு அடங்கிய பாஸ்போர்ட்டின் தொடர்புடைய பக்கங்களின் ஒளிநகலையும் சேர்த்து அளிக்கவேண்டும். வாக்காளர் பதிவு அதிகாரி மூல பாஸ்போர்ட்டினை ஒப்பிட்டுச் சரிபார்த்து அப்போதே திரும்பக் கொடுத்துவிடுவார். எனவே, படிவம் 6A நேரில் அளிக்கப்படும்போது வாக்காளர் பதிவு அதிகாரியின் அலுவலகத்தில் மட்டுமே பெறப்படும். நிர்ணயிக்கப்பட்ட அமைவிடங்களில் பெறப்படமாட்டாது. படிவம் 6A தபாலில் அனுப்பப்படும்போது பாஸ்போர்ட்டின் ஒளிநகல்கள் சுய சான்றொப்பமிட்டு இணைக்கப்படவேண்டும்.

(6) விண்ணப்பங்களின் மீது வாக்காளர் பதிவு அதிகாரி ஆணை பிறப்பிப்பதற்கு முன், அதில் அளிக்கப்பட்டுள்ள தகவல்கள் குறித்து வாக்குச்சாவடி நிலை அலுவலர் (Booth Level Officer) வீடுகளுக்குச் சென்று விசாரணை மேற்கொள்வார்.

(7) கோரிக்கைகள் மற்றும் மறுப்புரைகளின் பட்டியல் தலைமைத் தேர்தல் அதிகாரியின் வலைதளத்தில் வெளியிடப்படும். ஆட்சேபணை ஏதுமிருப்பின், அப்பட்டியலை அடிப்படையாகக் கொண்டு, சம்பந்தப்பட்ட வாக்காளர் பதிவு அதிகாரியிடம் தெரிவிக்கலாம்.

**தலைமைத் தேர்தல் அதிகாரி**
**தமிழ்நாடு**

**வெளியீடு: – இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, தலைமைச் செயலகம், சென்னை.**